உ

கடவுள் துணை.

தடிக்கழுதைப் பாட்டு.

ஆண்பிள்ளை வீண்பிள்ளைச்சிந்தும்

அடங்கியிருக்கின்றன.

இஃது,

மயிலம்

சுப்பிரமணியசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

சென்னை-இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களது

சென்னை,

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

சென்னை-ஆச்சாரப்பன்தெரு. நெ. 84.

நீதிச்சிந்துயென்னும்

பெண்புத்திமாலை.

அன்னை தந்தைகளை தெய்வமென்றே தினம்
அன்பாயுபசரிப்பாள் பதிவிரதை
இன்னிலத்தினில்கெட்ட துரோகியெனும்பேரை
ஏற்றுக்கொள்வாள்மூடத் தடிக்கழுதை. ௧

சொந்தக்கணவனொரு அந்தகனானாலும்
வந்தனைசெய்திடுவாள் பதிவிரதை-இல்லாமல்
சிந்தையில்வெவ்வேறு எண்ணத்தால்கணவனை
சீறித்திரிபவள் தடிக்கழுதை. ௨

தனதுகணவன்மூட தடியனா இருந்தாலும்
தன்மையுடனிருப்பாள் பதிவிரதை-இல்லாமல்
மனதுக்கிசைந்தநல்ல மன்னனாயிருந்தாலும்
மதியாமல்பேசிடுவாள் தடிக்கழுதை. ௩

மாமியாரடித்தாலும் நாய்செய்தகுற்றமென்று
மவுனமாயிருப்பாள் பதிவிரதை-இல்லாமல்
சாமியாரைப்போல யாரையுமதியாமல்
சண்டைக்கிழுப்பவளே தடிக்கழுதை. ௪

கணவன்சம்பாதனையைக் கண்டுசம்சாரத்தில்
கருத்தாயிருப்பவளே பதிவிரதை-இல்லாமல்

கணவனைமதியாமல் கண்டபடியழித்து
கடன்காரனுக்குவாள் தடிக்கழுதை. ரு
தண்ணிக்குபோனாலும் தன்னடிபிசகாமல்
தலைகுனிந்துபோவாள் பதிவிரதை-இல்லாமல்
என்னத்தொழிலாக தெருவில்வந்தால்சண்டை
என்னதென்றோடுவாள் தடிக்கழுதை. சு
அன்னியபுருஷர்மெத்த அழகாயிருந்தாலும்
ஆசைவையாள்நல்ல பதிவிரதை-இல்லாமல்
என்னசாதியாயிருந்தாலும் புருஷர்மேல்
இச்சைகொண்டுதிரிவாள் தடிக்கழுதை எ
கொண்டையில்மலர்சூடி தெருவேகவொண்ணாதென்று
கூச்சத்துடனிருப்பாள் பதிவிரதை-இல்லாமல்
செண்டுப்பூவானாலும் கொண்டையில்முடித்துத்
தண்டுத்தனங்கள்செய்வாள் தடிக்கழுதை. அ
கொண்டகணவன்மாமி மாமனாரடித்தாலும்
குறுக்கப்பேசாதிருப்பாள் பதிவிரதை-இல்லாமல்
வண்டைத்தனமாகச் சண்டைக்கிழுத்தவர்கள்
மானங்கெடுத்திடுவாள் தடிக்கழுதை. கூ
காலையிலெழுந்துகணவனடிபணிந்து-அவன்
கருத்தைப்போலேநடப்பாள்பதிவிரதை-இல்லாம(ல்
வேலைக்கிசோம்பலாய் பாயில்படுத்தபடி
வீண்பொழுதைக்கழிப்பாள்-தடிக்கழுதை க0
அங்கம்பசித்தொருவர் அய்யமென்றுவந்தால்
அன்பாயுபசரிப்பாள் பதிவிரதை-இல்லாமல்

தங்கவொட்டாமலே சீரித்தெருவில்கொட்டித்
தள்ளப்போவாள்மூட தடிக்கழுதை. ௧௧

அண்டைவீடெதிர்வீடு அருமுகமானாலும்
அகத்தைவிட்டுப்பிரியாள் பதிவிரதை-இல்லாமல்
லண்டசிநேகஞ்செய்து கண்டவிடந்திரிந்து
சண்டையிழுத்திடுவாள் தடிக்கழுதை. ௧௨

கட்டினதாலி கயரோடிருந்தாலும்
கணவனைவெருக்காள் பதிவிரதை
மட்டித்தடியனென்னை கட்டினநாள்முதல்
மரம்போலிருந்தேனென்பாள் தடிக்கழுதை. ௧௩

வாசற்படிகடந்தால் வருங்குற்றம்நமக்கென்று
வண்மையாயுள்ளிருப்பாள் பதிவிரதை-இல்லாமல்
பேசஅயல்வீடு யெங்குங்கலகத்தை
பெருகச்செய்துவருவாள் தடிக்கழுதை. ௧௪

குடும்பங்கலையாமலே கூட்டமாயெல்லோரும்
கூடியிருக்கச்செய்வாள் பதிவிரதை-இல்லாமல்
நடுங்கவெல்லோரையும் பேசிகுடும்பமதை
நாலாய்க்கலைத்திடுவாள் தடிக்கழுதை. ௧

அழகிலாக்கணவனாயிருந்தாலும் அவனன்றி
யன்னியரைநாடாள் பதிவிரதை-இல்லாமல்
வொழுங்காயொருவன்வரக்கண்டாலவனைத்தேடி
ஒருமித்துசேர்ந்திடுவாள் தடிக்கழுதை. ௧௬

கதிரவனுதிக்காமுன்-காலைக்கடன்முடித்து
கணவனெதிர்வருவாள் பதிவிரதை-இல்லாமல்

பிரதிதினமும்கணவன் பிதற்றினாலும்பெருந்
திண்டுபோல்தூங்குவாள் தடிக்கழுதை. ௧௭
அரஞ்செயவிரும்பென அவ்வுரையுரைத்தமொழி
அனுகளவும்பிசகாள் பதிவிரதை-இல்லாமல்
தரும்பிச்சையைக்கூட தடுத்துவேண்டாமென்று
தானுங்கொடுக்கவொண்ணாள்தடிக்கழுதை. ௧௮
உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகென்ப
துண்மையெனநடப்பாள் பதிவிரதை-இல்லாமல்
கண்டபாட்டுகள் ஆட்டங்கள்பார்க்கவும்
கைவிரித்துதிரிவாள் தடிக்கழுதை ௧௯
ஊருடன்பகைக்கின் வேருடன்கெடுமென்ற
உண்மையையறிந்துக்கொள்வாள் பதிவிரதை-இல்
ஆராகினுஞ்சரி வாங்கள்வெளியேயென்று[லாமல்
அதட்டிதிரிந்திடுவாள் தடிக்கழுதை. ௨௦
சக்களத்தியீன்ற பிள்ளையாயிருந்தாலும்
சமமாய்பார்த்திருப்பாள் பதிவிரதை-இல்லாமல்
மிக்கஒழுக்கமுள்ள சேயனாயிருந்தாலும்
மெலியமிரட்டிடுவாள் தடிக்கழுதை. ௨௧
யிரப்பவர்க்குபிச்சை யிடவேணுமென்பதை
எண்ணிநடந்திடுவாள் பதிவிரதை-இல்லாமல்
வரக்கண்டவுடனிங்கு வைத்திருக்குதோவென்று
வாதுசெய்தோட்டுவாள் தடிக்கழுதை. ௨௨
பணிகளிருந்தாலும் அணிந்துவெளியில்வந்து
பாதையில்நடக்காள் பதிவிரதைஇல்லாமல்

துணியாகிலும்ஒழுங்கா யலங்கரித்துக்கொண்டு
சொகுசாய்திரிந்திடுவாள் தடிக்கழுதை. ௨௩

இன்னிலக்ஷத்தையை சொன்னேன்முனிசாமி
இதைத்தெரிந்துகொள்வாள் பதிவிரதை-இல்லாம
என்னபாட்டுஇதை அச்சிலிட்டாரென்று (ல்
என்னைப்பழிப்பவளே தடிக்கழுதை. ௨௪

பெண்புத்திமாலை-முற்றிற்று.

ஆண்பிள்ளை வீண்பிள்ளைசிந்து.

காப்பு-வெண்பா.

சீராருலகினிற்றந் தீய்நெறிமாறிப்
பேரார்நன்னெறிவிளங்கப்பேசுதற்கிங்-கோரும்
மும்மலமுமுச்சுடரும் முப்பாலுக்கப்பாலுஞ்
செம்மலிணைத்தாளிணையே சேர்.

கண்ணிகள்

சீர்மல்கியசராசரமாமொழிற்
சிவமதைச்சேர்ந்தவ னாண்பிள்ளை
உயர்தவமதிற்சேர்ந்தவ னாண்பிள்ளை
பார்வருஉடலமாம் மனமதுகொண்டு
பாவத்திலுழன்றவன் வீண்பிள்ளை
சத்துச்சித்தான நலமாகியபரவெளி
தன்னையறிந்தவ னாண்பிள்ளை
மெய்யிற்றன்னையறிந்தவ னாண்பிள்ளை

முத்திமுதல்வனை பணியாமல்நாடோறும்
மூடமாய்த்திரிந்தவன் வீண்பிள்ளை
மும்மலமுங்கடந்த மூர்த்தியினருள்பெற
முனைந்துதிரிந்தவ னாண்பிள்ளை
மனங்கனிந்துபரிந்தவ னாண்பிள்ளை
இம்மனிதலவாழ்வை சதமெனவெண்ணியே
யேங்கியலைந்தவன் வீண்பிள்ளை
நாலிரண்டுக்குமெட்டா நாதன்திருவடியை
நாலைத்துணிந்தவ னாண்பிள்ளை
வினைவாடப்பயந்தவ னாண்பிள்ளை
பாலினுமின்சொலாய் பாவையர்களாகிப்
பரிவுகொண்டலைந்தவன் வீண்பிள்ளை
ஆதிமூலமேயென்று ஓதுங்கஜேந்திரனுக்
கருளியதையறிந்தோ னாண்பிள்ளை
மறுத்திருளறபுரிந்தோ னாண்பிள்ளை
பாதகனாய்ப்புவியில் வீணர்கடமைக்கூடி
பாதர்களைப்பழித்தோன் வீண்பிள்ளை
ஆதியனாதிசோதியாய்மின்றிலங்கும்
அய்யனையறிந்தவ னாண்பிள்ளை
ஒளிர்மெய்யனையறிந்தவ னாண்பிள்ளை
ஓதியுணராமல்மாதரைக்கூடி
புறக்கத்திலலைந்தவன் வீண்பிள்ளை
பஞ்சரக்கூட்டினிலிருந்தாடனமிடும்
பரமனையறிந்தவ னாண்பிள்ளை
தன்திறமையால்தெரிந்தவ னாண்பிள்ளை

வஞ்சனைசெய்மடமாதர்கள்மயக்கத்தில்
வாடிவிழிப்பவனே — வீண்பிள்ளை
சந்த்ரசடாசூடசங்கரனேயென்று
சாற்றித்திரிந்தவ — ஆண்பிள்ளை
நிதம்போற்றித்திரிந்தவ — ஆண்பிள்ளை
சுந்தரஞ்சேர்மட மாதர்கள்மையலால்
சோர்வுற்றலைந்தவன் — வீண்பிள்ளை
மெய்யடியார்களைக்கண்டே யடிபணிந்து
மேவிநடப்பவ — ஆண்பிள்ளை
மலர்தூவிவிடுப்பவ — ஆண்பிள்ளை
வையகமீதினில் வீணரைக்கூடி
மதிகெட்டலைபவன் — வீண்பிள்ளை
சத்திரஞ்சாவடிச் சாலைகள்சோலைகள்
தானமைத்திட்டவ — ஆண்பிள்ளை
கொடுங்கான் திரிந்திட்டவ — ஆண்பிள்ளை
சித்திரவிலைமாதர்கள் மெச்சிடமேடைகள
செம்பொனளித்தவன் — வீண்பிள்ளை
தேவாலயங்களுந் திகழ்மாடங்களுங்கண்ட
தேசங்கள்திரிந்தவ — ஆண்பிள்ளை
நல்லோர்கள்வாசங்கள்புரிந்தவ — ஆண்பிள்ளை
பாவாணர்களுக்குப் பத்தர்க்குமாசைசொல்லி
பலகாலந்திரியச்செய்தோன் — வீண்பிள்ளை

ஆண்பிள்ளை வீண்பிள்ளைசிந்து முற்றிற்று.